**DEPOSITION OF WITNESS**

| | | |
|---|---|---|
| IN THE COURT OF | : | Judicial Magistrate, Thuraiyur. |
| Case No. | : | STC. 402 of 2017 |
| Prosecution Witness | : | DW1 |

23.11.2023.

| | | | |
|---|---|---|---|
| Name | : ராஜேந்திரன் | Caste | : |
| Father Name | : பெரியசாமி | Calling | : முதுநிலை வங்கி மேலாளர் |
| Village | : சேலம் | Religion | : |
| Taluk | : சேலம் | Age | : 57 |

**சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.**

எதிரி ஆஜரில்லை. மனு தாக்கல் செய்து அனுமதிக்கப்பட்டது. வழக்கறிஞர் ஆஜர்.

**முதல் விசாரணை**

நான் தற்போது திருச்சி கண்டோன்மென்ட் கனரா வங்கியில் முதுநிலை மேலாளராக பணிபுரிந்து வருகிறேன். இந்நீதிமன்றத்திலிருந்து எதிரி சரவணன் வங்கி கணக்கு எண் 1223101035133 என்ற வங்கி கணக்கிற்கான அனைத்து கோப்புகளுடன் ஆஜராகி சாட்சியம் அளிக்குமாறு அழைப்பாணை வரப்பெற்றது. எதிரி சரவணன் 21.03.2009 அன்று எங்களது வங்கியில் வங்கி கணக்கு தொடங்கி 29.09.2021 அன்று Close செய்துவிட்டார். 01.09.2016 முதல் 31.08.2017 ஆண்டிற்கான சரவணனின் வங்கி வரவு செலவு கணக்கை தாக்கல் செய்கிறேன். 08.03.2017 அன்று காசோலை எண் 838226 என்ற காசோலை வங்கி கணக்கில் பணம் இல்லை என்பதற்காக திருப்பப்பட்டுள்ளது. **01.09.2016 முதல் 31.08.2017 ஆண்டிற்கான சரவணனின் வங்கி வரவு செலவு பட்டியல் எ.ம.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

<u>புகார்தாரர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

மேற்படி Account Holder ன் முகவரி எ.ம.சா.ஆ.1 ல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேற்படி கணக்கு சேமிப்பு கணக்கு ஆகும். மேற்படி சரவணனுக்கு எங்கள் வங்கியில் காசோலை புத்தகம் எப்போது கொடுத்தோம் என்றால் பிப்ரவரி மாதம் 2017 ல் கொடுத்தோம். சரவணன் கொடுத்த காசோலை 08.03.2017 அன்று திருப்பப்பட்டது. சரவணன் தனது வங்கி கணக்கிற்கு Stop payment கடிதம் எதுவும் வங்கியில் கொடுக்கவில்லை.

உண்மை நகல்

ஒம்/-அ.நர்மதாராணி,
குற்றவியல் நீதித்துறை நடுவர்,
துறையூர்.